**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 27/2023**

**வாதி தரப்பு சாட்சி–1 ராஜேந்திரன்** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் தெரியுமா என்றால் அவ்வளவாக தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த போது வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ன் 4 ம் பக்கத்தில் பூசாரி நாயக்கர் நிலத்திற்கு மேல்புறத்தில் தென்வடலில் 12 அடி அகலத்தில் தெற்கு நோக்கி வந்து கொண்டிருக்கும் மாமூல் வழிநடை பாதை என கண்டுள்ளது என்றால் சரிதான். நானும், பிரதிவாதியும் பூசாரி வகையறாவிடம் இருந்து கிரையம் வாங்கினோமா என்றால் இல்லை, நான் ராஜலிங்கம் மனைவி மாரியாயி என்பவரிடம் வாங்கினேன். பிரதிவாதி பூசாரிடமிருந்து கிரையம் வாங்கினார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பூசாரி நிலத்திற்கு மேற்கில் தான் எனக்கு பாதை வசதி கொடுக்கப்பட்டுள்ளது என்றும் நான் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**